நமது தினக்கனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

நமது தினக்கனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 153 | 4 Pages | 31.12.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 153 | 4 பக்கங்கள் | 31.12.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கங் கடை**

**விளக்கம்:**
கொலையால் நன்மையாக விளையும் ஆக்கம் பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவானதாகும்.

# பொங்கல் பரிசு ரூ.1000 கிடையாது ஜனவரி 9ந் தேதி முதல் டோக்கன்

சென்னை, டிச.31

தமிழரின் பாரம்பரிய திருவிழாவான பொங்கல் திருவிழா வரும் தை மாதம் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இதற்கிடையில், பொங்கலுக்கான பரிசு தொகுப்புகள் வழங்க தமிழக அரசு தயாராகி வருகிறது. ஆண்டுதோறும் தமிழக அரசு 2025 தைப்பொங்கலுக்கு அரிசி அட்டைதாரர்களுக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மற்றும் வேட்டி சேலை உள்ளிட்டவைகளை வழங்குகிறது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ரூ.1000 ரொக்கம் ரேஷன் கடைகளில் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த முறை மத்திய, மாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து மற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு 1000 ரூபாய் ரேஷன் கடைகளில் ரொக்கமாக வழங்கப்பட்டது.

ஆனால், இந்த முறை மத்திய, மாநில அரசு ஊழியர்கள் அனைவருக்கும் 1000 ரூபாய் வழங்க அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது. இதுதொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என கூறப்பட்டது. இந்நிலையில் பொங்கல் பண்டிகைக்கான பரிசுத் தொகுப்பு அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இதில், ஒருகிலோபச்சரிசி, சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் வேட்டி சேலை குறித்த அறிவிப்பு மட்டுமே இடம் பெற்றுள்ளது. ஆனால், பொதுமக்கள் எதிர்பார்த்த பொங்கல் பரிசு தொகுப்பான ரூ.1000 இடம் பெறவில்லை.

பொங்கல் பரிசுத்தொகுப்பில் இருக்கப்போவது இதுதான்.. மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததா தமிழக அரசு?பொங்கல் பரிசுத்தொகுப்பில் இருக்கப்போவது இதுதான்.. மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததா தமிழக அரசு?

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள்அறுவடைத்திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.




2025ஆம் ஆண்டு தைப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத்தமிழர்மறுவாழ்வுமுகாம்களில் வசிக்கும்குடும்பத்தினருக்குத்அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2.20 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர்களும் பயன்பெறுவார்கள். பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்குவது மூலம் அரசுக்கு ரூ.249.76 கோடி செலவு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படும் இலவச வேட்டி சேலைகள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், பொங்கல் பரிசுத் தொகுப்புடன் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதேபோல், இந்த ஆண்டிற்கான பொங்கல் பரிசுத்தொகுப்பிற்கான டோக்கன் வழங்கும் பணிகள் வரும் ஜனவரி 9ம் தேதி முதல் விநியோகம் செய்யப்படவுள்ளது.

## பஞ்சாப்பில் விவசாயிகள் போராட்டம் போக்குவரத்து பாதிப்பு



சண்டிகர், டிச.31


வேளாண் விளைபொருட்கள், பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிக்க வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயிகளின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க வலியுறுத்தி, பஞ்சாப் அரியானா எல்லையில் உள்ள கனவுரியில் பஞ்சாப் விவசாய சங்க தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால் (வயது 70) கடந்த மாதம் 26ம் தேதி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். உண்ணாவிரத போராட்டத்தில்ஈடுபட்டுவரும்நிலையில்அவரதுஉடல்நிலைமோசமாகி வருகிறது. அதேவேளை, ஜக்ஜித் சிங்கை 31ம் தேதிக்குள் மருத்துவமனையில் அனுமதிக்கும்படி பஞ்சாப் அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், பஞ்சாப் மாநிலத்தில் விவசாயிகள் இன்றும் போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றனர்.வேளாண்விளைபொருட்களுக்கு குறைந்தபட்சஆதாரவிலையைஉறுதிசெய்யவேண்டும்உள்படபல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப்பில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் சாலைகளில் அமர்ந்து விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சண்டிகர் பட்டியாலா சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மிகுந்த அவதியடைந்துள்ளனர். ஜண்டன் நகரில் உள்ள சுங்கச்சாவடி அருகே அமர்ந்தும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

## விண்ணில் இன்று பாய்கிறது பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட்; தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை



புதுடெல்லி, டிச.31

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2வது ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் இன்று இரவு 9.58 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது. இதற்கான இறுதிக்கட்டப்பணியான 25மணிநேரகவுண்ட்டவுன் நேற்று இரவு 8.58 மணிக்கு தொடங்கியது.

இந்த ராக்கெட் , ஸ்பேடெக்ஸ்ஏ, ஸ்பேடெக்ஸ்பி என தலா 220 கிலோ எடை கொண்ட 2 சிறிய செயற்கைக்கோள்களை சுமந்து செல்கிறது. பூமியில்இருந்து470கி.மீ.உயரத்தில்வெவ்வேறுசுற்றுவட்டப்பாதைகளில் 2 செயற்கைக்கோள்களும் நிலைநிறுத்தப்படுகின்றன.

இஸ்ரோ சார்பில் இந்த ஆண்டிற்கான இறுதி திட்டத்தின்படி, பி.எஸ்.எல்.வி. சி60 ராக்கெட் இன்று ஏவப்பட உள்ள சூழலில், தமிழக மீனவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

இதுபற்றி தமிழக மீன்வள துறை வெளியிட்ட எச்சரிக்கை அறிவிப்பில், திருவள்ளூர் மாவட்டத்தின் பழவேற்காடு பகுதி மீனவர்கள், ராக்கெட் ஏவுதலின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடலுக்கு செல்லாமல் தவிர்க்க வேண்டும் என கேட்டு கொள்ளப்பட்டு உள்ளது.

## கனடா: தரையிறங்கும்போது விமானத்தில் பற்றிய தீ அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய 80 பயணிகள்



ஒட்டாவா, டிச.31

கனடாவின் ஹாலிபேக்ஸ் விமானநிலையத்தில் 'ஏர் கனடா' நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் சுமார் 80 பயணிகளுடன் தரையிறங்கியது. ஆனால் விமானம் தரையிறங்கும்போது அதன் லேண்டிங் கியரில் பழுது ஏற்பட்டது. இதனால் இறக்கை பகுதி ஓடுபாதையில் உரசி, விமானத்தல் திடீரென தீ பற்றியது.

விமானத்தில் தீ பற்றியதை பார்த்த பயணிகள் பயத்தில் அலறத் தொடங்கினர். இதற்கிடையில் விமான நிலைய அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு தீயணைப்பு வாகனங்கள் மூலம் விமானத்தில் பற்றிய தீயை அணைத்தனர். இந்த சம்பவத்தில் விமானத்தில் இருந்த 80 பயணிகளும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு முதலுதவி சிகிச்சைக்காக மருத்துவமனைக்குஅனுப்பிவைக்கப்பட்டனர்.இந்தவிபத்துதொடர்பான காட்சிகள்தற்போதுசமூகவலைதளங்களில்பரவிவருகின்றன.முன்னதாக தென்கொரியாவில் விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்த நிலையில், அடுத்தசிலமணிநேரங்களில்கனடாவில்விமானவிபத்துநிகழ்ந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## புதுமைப் பெண் திட்ட விரிவாக்கம்: ப.சிதம்பரம் பாராட்டு

சென்னை, டிச.31

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021ம் ஆண்டில் ஆட்சி பொறுப் பேற்றது முதல் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக, குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார். பெண்களுக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயண வசதி தரும் விடியல் பயணத் திட்டம், இல்லத்தரசிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அரசுப் பள்ளிகளில் உயர்கல்வியில் சேரும் மாணவியர்க்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கிடும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித் திட்டம் எனும் புதுமைப் பெண் திட்டம் முதலான பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி, தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று வருகிறார்.

இத்திட்டங்களுள் புதுமைப் பெண் திட்டம் 2022ம் ஆண்டு செப்டம்பர்5ம் தேதி வடசென்னைபாரதி மகளிர் கல்லூரில் முதன்முதலில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக, அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேரும் மாணவியர்க்கு மாதம் 1,000 ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது. இத்திட்டம், வறுமை காரணமாக உயர்கல்வியில் சேர இயலாத மகளிர்க்கு உயர்கல்வி வாய்ப்பை தருவதோடு, பெற்றோரின் பொருளாதாரச் சுமையை குறைக்கிறது. இளம்



வயது திருமணங்களையும் தடுக்கிறது. மாணவியர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கிறது. புதுமைப் பெண்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், இத்திட்டம் குறித்து முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம் எக்ஸ் தள பதிவில் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சரின் 'புதுமைப் பெண்' திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பை வரவேற்று முதலமைச்சரைப் பாராட்டுகிறேன். உயர் கல்வி படிக்கும் 75,028 மாணவிகள் பயன் பெறுவார்கள் என்ற தகவல் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இந்த முடிவு பல பயன்களைத் தரும் என்பதில் ஐயமில்லை என பதிவிட்டுள்ளார்.

## 'அனைத்து அரசு பேருந்துகளிலும் விரைவில் ஜி.பி.எஸ். கருவி' அமைச்சர் சிவசங்கர் தகவல்



சென்னை, டிச.31

அரசு பேருந்துகளில் ஜி.பி.எஸ். கருவி பொருத்தும் பணி, தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

"வைக்கம் போராட்ட நூற்றாண்டு வெற்றி விழாவின் நினைவாக வைக்கத்தில் இருந்து சென்னைக்கு பேருந்து சேவை இயக்க வேண்டும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் ஆசிரியர் கி.விரமணி கோரிக்கை விடுத்திருந்தார். அதன் படி வைக்கம்சென்னை வழித்தடத்தில் 2 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. அரசு பேருந்துகளில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தும் திட்டம் முதற்கட்டமாக சென்னையில் நடைமுறைக்கு வந்துள்ளது. தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பேருந்துகளிலும் ஜி.பி.எஸ். கருவி பொருத்தும் பணி விரிவுபடுத்த ப்படும்." இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

## காரைக்காலில் திடீரென உள்வாங்கிய கடல்



காரைக்கால், டிச.31

புத்தண்டு, அரையாண்டு விடுமுறை என்பதாலும், ஞாயிற்றுக்கிழமை என்பதாலும், காரைக்கால் கடற்கரையில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இன்று குவிந்தனர். அவர்கள் கடலில் குளித்தும், செல்பி எடுத்தும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில், கடல் திடீரென உள்வாங்கியதுடன், காற்றும் சுழன்றடித்து வீசியது. இதைக்கண்டு அச்சமடைந்த சுற்றுலா பயணிகள், கடற்கரையை விட்டு அவசர அவசரமாக வெளியேறினர். கடற்கரையில் பொழுதை கழிக்க வந்த சுற்றுலா பயணிகள், வானிலை மாற்றம் மற்றும் கடல் உள்வாங்கிய நிகழ்வால், ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.



# சீமானுக்கு நிச்சயம் தண்டனை வாங்கி தருவேன்: திருச்சி சரக டி.ஐ.ஜி. வருண்குமார்



திருச்சி, டிச.31

திருச்சி முன்னாள் எஸ்.பி.,யும் தற்போதைய டி.ஐ.ஜி.,யுமான வருண்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் பற்றி சமூக வலைதளங்களில் நாம் தமிழர் கட்சியினர் அவதூறு பேசுவதாக அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது வருண்குமார் வழக்கு தொடர்ந்திருந்தார்.

முன்னதாக டி.ஐ.ஜி. வருண்குமார், சீமானுக்கு நோட்டீஸ் அனுப்பிய நிலையில் அது தொடர்பாக விளக்கத்தை சீமான் அளித்திருந்தார். ஆனால் தங்கள் கேள்விகள் எதற்கும் பதில்அளிக்கவில்லை என கூறிய வருண்குமார், திருச்சிகுற்றவியல்கோர்ட்டில் சீமான் மீது வழக்கு தொடர்ந்தார்.

அந்த மனுவில் "சீமான் தன்னையும் தனது குடும்பத்தினரையும் பல்வேறு பேட்டிகள் பொதுக்கூட்டங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் அவதூறாக பேசியும் தனிப்பட்ட விதத்தில் மிரட்டுவதால் தங்கள் குடும்பத்தினர் மன உளைச்சலுக்கு ஆளாகி இள்ளோம். எனவே சீமான் தனக்கு இரண்டு கோடி ரூபாய் நஷ்ட ஈடாக தர வேண்டும் .அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த புகார் தொடர்பாக திருச்சி கோர்ட்டில் வருண்குமார் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்று திருச்சிகுற்றவியல்கோர்ட்டில் வருண்குமார் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். தனிப்பட்ட வழக்கு என்பதால் வருண்குமார், காவல் சீருடையில் இல்லாமல், சாதாரண உடையிலேயே கோர்ட்டில் ஆஜரானார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "சீமான் தனியாக சந்தித்து மன்னிப்பு கேட்பதாக தொழிலதிபர் ஒருவர் மூலமாக தூது விட்டார். நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.. பொதுவெளியில் மன்னிப்பு கேட்க தயாராக இருந்தால் கோர்ட்டில் அதை தெரிவிக்கட்டும். சீமான் இனி மேல் பொதுவெளியில் மன்னிப்புக் கேட்டாலும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். தமிழ்நாடு சீமான் மீது தற்போது கிரிமினல் வழக்கு தொடர்ந்து உள்ளேன்; அடுத்தகட்டமாக சிவில் வழக்கு தொடர இருக்கிறேன்.

சீமானின் பேச்சுக்கு நிச்சயம் தண்டனை வாங்கி தருவேன். என்னை மிரட்டி பார்க்க முடியாது. அதற்கான ஆள் நான் இல்லை" என்று வருண்குமார் கூறினார்.

# விஜய்யை தொடர்ந்து கவர்னர் ஆர்.என்.ரவியுடன் அண்ணாமலை சந்திப்பு



சென்னை, டிச.31


அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்த நிலையில்,

இது தொடர்பாக கவர்னர் ஆர்.என்.ரவியை சந்தித்து பேசினார்.

அப்போது தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்றும், அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், தெரிவித்து கவர்னரிடம் விஜய் மனு கொடுத்தார்.

இந்த நிலையில், விஜய்யை தொடர்ந்து பாஜக மாநில தலைவர் அண்ணாமலையும் இன்று கவர்னர் மாளிகைக்கு சென்று கவர்னரை சந்தித்தார். அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கக்கோரி கவர்னரை அண்ணாமலை சந்தித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

# பொங்கல் பரிசுத் தொகை : தமிழக மக்களுக்கு பெரும் ஏமாற்றம்: கே.பாலகிருஷ்ணன் பேச்சு



சென்னை, டிச.31

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கி வருகிறது. பொங்கலுக்கு தேவையான பொருள்களுடன் சேர்த்து ரொக்கப் பணமும் வழங்கப்படும். கடந்த ஆண்டு 1,000 ரூபாய் ஒவ்வொரு ரேஷன் அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த சூழலில் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட பொங்கல் பரிசு தொகுப்பில் பொங்கலுக்கு தேவையான பொருள்கள் மட்டும் அறிவிக்கப்பட்டது. ரொக்கப் பணம் அறிவிக்கப்படவில்லை. இது மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் பொங்கல் பரிசுத் தொகை அறிவிப்பு, தமிழக மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொங்கல் தமிழர்களின் முக்கியமான பண்பாட்டுத் திருவிழா ஆகும். பொங்கல் சிறப்பாக கொண்டாட மக்கள் தயராகி வருகின்றனர். தமிழ்நாடு அரசு பொங்கல் தொகுப்பு திட்டத்தை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரத்தில் வழக்கமாக வழங்கப்படும் பொங்கலுக்கான பரிசுத் தொகை அறிவிக்கப்படாதது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

தமிழக நிதியமைச்சர் அவர்கள் மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு நிதி வழங்குவதில் பாரபட்சமாக நடந்து கொள்வது, இயற்கை பேரிடருக்கு தமிழ்நாடு அரசு கோரிய நிதியினைதராமல் சொற்ப நிதியை வழங்கியிருப்பது, வெள்ள பாதிப்புகளுக்கு தமிழ்நாடு அரசு செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் போன்ற காரணங்கள் அனைத்தும் ஏற்கத்தக்கது தான்.

இருப்பினும் பொங்கல் பண்டிகைக்கு நிதிப்பற்றாக்குறையை காரணம் காட்டி வழங்க மறுப்பது பொருத்தமல்ல. எனவே, தமிழ்நாடு அரசு நிதி சிரமம் இருப்பினும், பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றப்படுவதைப் போல இந்த ஆண்டு பொங்கலுக்காக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பரிசுத்தொகையாக ரூ. 1000/ வழங்கிட முன்வர வேண்டுமென்று சிபிஐ (எம்) மாநில செயற்குழு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறது

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்காசி: கடனாநதி, அடவிநயினார் அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு

தென்காசி, டிச.31

பிசான சாகுபடிக்காக கடனாநதி, அடவிநயினார், கருப்பாநதி ஆகிய அணைகளில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறந்துவிடப்பட உள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;

1. தென்காசி மாவட்டம், செங்கோட்டை வட்டம், மேக்கரை கிராமத்தில் உள்ள அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தினை கருத்தில் கொண்டு மேட்டுக்கால், கரிசல்கால், பண்பொழிகால், வல்லாக்குளம் கால், இலத்தூர்கால், நயினாரகரம்கால், கிளங்காடுகால், கம்பிளிகால், புங்கன்கால், சாம்பவர்வடகரைகால்வாய் மற்றும் இரட்டைக்குளம் கால்வாய் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசனம் பெறும் நிலங்களுக்கு 1434ம் பசலி பிசான சாகுபடி செய்வதற்கு அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத்தில் இருந்து 31.12.2024 முதல் 31.03.2025 வரையிலான 91 நாட்களுக்கு நீர் இருப்பை பொறுத்து வினாடிக்கு 100 கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தென்காசி மாவட்டம், செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் வட்டங்களில் உள்ள மொத்தம் 7643.15 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

2. தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் உள்ள கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தினை கருத்தில் கொண்டு, பெருங்கால், பாப்பான்கால், சீவலன்கால், இடைகால், கிளாங்காடுகால் மற்றும் ஊர்மேலழகியான்கால் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசன நிலங்களுக்கு 1434ம் பசலி பிசான பருவ சாகுபடி செய்வதற்கு கருப்பாநதி நீர்த்தேக்கத்தில் இருந்து 31.12.2024 முதல் 31.03.2025 வரையிலான 91 நாட்களுக்கு நீர் இருப்பை பொறுத்து வினாடிக்கு 25 கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தென்காசி மாவட்டம், கடையநல்லூர்வட்டத்தில்உள்ள மொத்தம் 9,514.70 ஏக்கர்நிலங்கள்பாசனவசதி பெறும்.

3. தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், சிவசைலம் கிராமத்தில் உள்ள கடனா நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர்வரத்தினை கருத்தில் கொண்டு, அரசபத்து, வடகுருவபத்துகால், ஆழ்வார்குறிச்சி தென்கால், ஆம்பூர் பெருங்கால், மஞ்சம்புளிகால், காக்கநல்லூர்கால் மற்றும் காங்கேயன்கால் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசன நிலங்களுக்கு 1434ம் பசலி பிசான பருவ சாகுபடி செய்வதற்கு கடனா நீர்த்தேக்கத்தில் இருந்து 31.12.2024 முதல் 31.03.2025 வரையிலான 91 நாட்களுக்கு நீர்இருப்பை பொறுத்து வினாடிக்கு 125 கனஅடிக்கு மிகாமல் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டம். அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சேரன்மகாதேவி வட்டங்களில் உள்ள மொத்தம் 9923.22 ஏக்கர்நிலங்கள்பாசனவசதி பெறும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈஷா கிராமோத்சவம் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நடைபெற வேண்டும்: சத்குரு



கோவை, டிச.31

ஈஷா சார்பில் பாரதத்தின் மாபெரும் விளையாட்டு திருவிழாவான 16 வது ஈஷா கிராமோத்சவத்தின் இறுதிப்போட்டிகள் சத்குரு முன்னிலையில் இன்று கோவையில் கோலாகலமாக நடைபெற்றது.

கோவை ஆதியோகி முன் நடைபெற்ற இறுதிப்போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் வீரேந்திர சேவாக், வெங்கடேஷ் பிரசாத், பாரா ஒலிம்பிக் வீரர்கள் மாரியப்பன் தங்கவேலு, துளசிமதி மற்றும் பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் வழங்கினர்.

இந்த விழாவில் சத்குரு பேசியதாவது:

ஒரு காலத்தில் 100 சதவீத கல்வி பெற்றதாக இருந்த நாடு, விடுதலை பெறும்போது 93 சதவீதம் கல்வியறிவு இல்லாத நாடாக மாறி இருந்தது. இது வெறும் 300 ஆண்டுகளில் நடைபெற்றது.

ஆனால் கடந்த 75 வருடங்களில் நாம் மகத்தான பல விஷயங்களைச் செய்துள்ளோம். புத்திசாலித்தனம், உறுதி, திறமை போன்ற பல அம்சங்கள் நம் வாழ்க்கையில் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் நமக்காக செயல்பட வேண்டும் என்றால் நாம் புத்துணர்வாக, உற்சாகமாக இருக்க வேண்டும். நீங்கள் புத்துணர்வாக இல்லை என்றால் எவ்வளவு பணம், சொத்து, திறமை இருந்தாலும் உங்களால் எதையும் உருவாக்க முடியாது. அந்த வகையில் கிராமங்களில் புத்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கிராமோத்சவம் நடத்தப்படுகிறது.

எளிமையாக துவங்கப்பட்ட இந்த கிராமோத்சவம் 5 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் பங்கு பெறும் பெரிய விழாவாக இன்று மாறி உள்ளது. ஆனால் இது போதாது. ஈஷா கிராமோத்சவம் காஷ்மீர்முதல் கன்னியாகுமரி வரை நடைபெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்த விழாவில் கிரிக்கெட் வீரர் சேவாக் பேசியதாவது:

மனித நல்வாழ்விற்காக சத்குரு செய்து வரும் மகத்தான பணிக்கு என் வணக்கங்கள். கிராமோத்சவம் திருவிழாவின் நோக்கம், தீவிரம் அனைத்தையும் பார்க்க ஆனந்தமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான கிராமங்களில் விளையாட்டுப் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்தி மகத்தான விளையாட்டுத் திருவிழாவாக இது நடந்து இருக்கிறது. இதற்கு சத்குருவிற்கு என் நன்றிகள். நீங்கள் வாழ்வதற்காக எதை செய்தாலும், விளையாட்டிற்காக தினமும் 10 15 நிமிடங்கள் செலவிடுங்கள்.

விளையாட்டு என்பது மகத்தான ஆசிரியர், அது குழுவாக இணைந்து செயல்படுவதை, எதிர்த்துப் போராடுவதை, இக்கட்டான சூழலில் இருந்து வெளியேறுவதை, தோல்வியிலிருந்து மீண்டு எழுவதை என வாழ்வின் பல அம்சங்களை நமக்கு கற்றுத் தருகிறது என கூறினார்.

பேட்மிண்டன் வீராங்கனை துளசிமதி முருகேசன் பேசுகையில், காஞ்சிபுரத்தில் இருந்து தினக்கூலிக்கு பிறந்த பெண்ணால் சாதிக்க முடியும் என்றால் உங்களாலும் சாதிக்க முடியும். பெண்கள் விளையாட்டில் சாதனை படைக்க சத்குரு ஊன்றுகோலாகத் திகழ்கிறார். நான் ஏராளமான சர்வதேச விளையாட்டுகளில் பங்கேற்று பல பதக்கங்களை வென்றிருக்கிறேன். அந்த நேரத்தில்எல்லாம்எனக்கு எழுந்த மன அழுத்தத்தில் இருந்து மீண்டு வர சத்குருவின் உத்வேக வார்த்தைகள் எனக்கு உதவியாக இருந்தது என்றார்.

கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் பேசுகையில், ஐ.பி.எல். போட்டிகளை ஒருங்கிணைப்பது கூட எளிதானது. இது போன்ற கிராமங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை ஒருங்கிணைத்து நடத்துவதுதான் கடினமானது. இதனை செய்யும் ஈஷாவிற்கும் சத்குருவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வாலிபால் இறுதிப் போட்டியில் கர்நாடக மாநிலம் பனகல் கிராமத்தைச்சேர்ந்த அலிப் ஸ்டார் அணி வென்று முதல் இடம் பிடித்தது. இரண்டாம் இடத்தை உடுப்பி மாவட்டம் பள்ளிகிராமத்தைச் சேர்ந்த பள்ளி பிரண்ட்ஸ்அணிபிடித்தது.

அதேபோல் பெண்களுக்கான த்ரோபால் இறுதிப்போட்டியில் கர்நாடக மாநிலம் மார்கோடு கிராமத்தைச் சேர்ந்த அணி வென்று முதல் இடத்தை பெற்றது. இரண்டாம் இடத்தை தமிழ்நாட்டில் இருந்து புள்ளாக்கவுண்டன் புதூர் கிராம அணி பிடித்தது

மாற்றுத்திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட வாலிபால் போட்டிகளை பாரா பேட்மிண்டன் வீராங்கனை துளசிமதி முருகேசன் துவங்கி வைத்தார். இதில் தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். இதில் முதல் இடத்தை கோவை அணியும், இரண்டாம் இடத்தை கிருஷ்ணகிரி அணியும் வென்றன.

16வது ஈஷா கிராமோத்சவ இறுதிப் போட்டியில் முதல் இடத்தை பிடித்த அணிகளுக்கு 5 லட்சமும், 2ம் இடத்தைப் பிடித்த அணிகளுக்கு 3 லட்சமும், 3 மற்றும் 4ம் இடத்தை பிடித்த அணிகளுக்கு தலா 1 லட்சமும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது.

முன்னதாக, ஈஷாவுடன் இணைந்து யுவா கபடி லீக் நடத்திய கபடி போட்டி நடைபெற்றது. தமிழ்நாடு மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையே நடைபெற்ற இந்தப் போட்டியில் தமிழ்நாடு அணி வெற்றி பெற்றது.

அதேபோல், ஈஷாவுடன் இணைந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் அசோசியேஷன் நடத்திய சூப்பர் ஓவர் கிரிக்கெட் சேலஞ்ச் போட்டியில் 150 அணிகள் பங்கேற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு சேவாக் கையெழுத்திட்ட கிரிக்கெட் பேட் வழங்கப்பட்டது. சிலம்பம் போட்டிகளில் 500க்கும் மேற்பட்டோர் வயது அடிப்படையில் 6 பிரிவுகளில் கலந்துகொண்டனர்.

இதனுடன் தென்னிந்திய மாநிலங்களின் பாரம்பரிய கலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த வகையில் தமிழ்நாடு சார்பில் பறையாட்டம் மற்றும் தவில், நாதஸ்வரம் இசை நிகழ்ச்சிகளும், கர்நாடகா சார்பில் பிலிவேசா எனும் புலி நடனமும், தெலுங்கானா சார்பில் கோண்டு பழங்குடிகளின் குசாடி நடனமும், கேரளா சார்பில் செண்ட மேளம் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் பஞ்சரி மேளம், 1000 பேர் கலந்துகொண்ட வள்ளி கும்மி, 500 பேர் பங்கேற்ற ஒயிலாட்டம், 1,500 பேர் பங்கேற்ற கோலப் போட்டி ஆகிய நிகழ்ச்சிகளும் பிரம்மாண்டமாக நடைபெற்றன.

# அறவழியில் மக்களை சந்தித்த கட்சித் தோழர்களை கைது செய்வது தான் ஜனநாயகமா..? த.வெ.க. தலைவர் விஜய்



சென்னை, டிச.31

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம், தமிழக மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சூழலில், தமிழகத்துத் தங்கைகளுக்கு இன்று நான் எழுதிய கடிதம் வெளியிடப்பட்டது. அதில், "எல்லாச் சூழல்களிலும், நிச்சயமாக உங்களுடன் உறுதியாக நிற்பேன், அண்ணனாகவும், அரணாகவும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் கல்வியில் கவனம் செலுத்துங்கள்" என்று வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

இக்கடிதத்தின் நகல்களைத் தமிழகம் முழுவதும் பொதுமக்களிடமும் பெண்களிடமும் த.வெ.க. மகளிரணியினர் மற்றும் கட்சி நிர்வாகிகள் வழங்கியுள்ளனர். சென்னையில் பொதுமக்களிடம் இந்த நகல்களை எம் கட்சித் தோழர்கள் வழங்க விடாமல் தடுத்த காவல் துறையினர், அவர்களைக் கைது செய்து, பின்னர் விடுவித்துள்ளனர். ஜனநாயக வழியில் பிரசுரங்களை விநியோகம் செய்ய முயன்றதற்காக அவர்களைக் கைது செய்தது கண்டனத்துக்கு உரியது.

கருத்துரிமை, பேச்சுரிமை அடிப்படையில், யாருக்கும் தொந்தரவு இல்லாமல் அறவழியில் மக்களைச் சந்தித்த எம் கட்சித் தோழர்களைக் கைது செய்வது தான் ஜனநாயகமா?

இது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளை மக்கள் வெகு காலம் வேடிக்கை பார்க்க மாட்டார்கள்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரம்: எப்.ஐ.ஆர். கசிந்தது எப்படி? தேசிய தகவல் மையம் விளக்கம்

சென்னை, டிச.31

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கு தொடர்பான எப்.ஐ.ஆர். கசிந்ததற்கு தொழில்நுட்பக் கோளாறே காரணம் என்று தேசிய தகவல் மையம் தெரிவித்துள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பையும், அதிர்வலையையும் ஏற்படுத்தி இருந்தது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட ஞானசேகரன் என்பவரைக் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் அதன் எப்.ஐ.ஆர். நகல் வெளியாகி சர்ச்சைக்குள்ளானது.

இந்தசூழலில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் தொழில்நுட்பக் கோளாறால் எப்.ஐ.ஆர். நகல் கசிந்ததாக சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பான வழக்கின் விசாரணையின் போது நீதிபதிகள், இந்த வழக்கில் எப்.ஐ.ஆர். எப்படி வெளியானது? என்று கேள்வி எழுப்பி இருந்தனர். அதற்கு அரசு தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தில், "முதல் தகவல் அறிக்கை காவல்துறை சார்பில் வெளியிடப்படவில்லை. இணையதளத்தில் தான் தவறுதலாக வெளியிடப்பட்டது. இருப்பினும் அது முடக்கப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஐ.பி.சி. (IPC)ல் இருந்து பி.என்.எஸ் (BNS) குற்றவியல் சட்டத்திற்கு மாறுவதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் எப்.ஐ.ஆர் கசிந்ததாக தமிழ்நாடு அரசுக்கு தேசிய தகவல் மையம் பதில் அளித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த பதிலில் கூறியிருப்பதாவது:

தேசிய தகவல் மையத்தில் எப்ஐஆர்ஐ பார்வையிடும் வசதி குறிப்பிட்ட சில பிரிவுகள் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் போது தானாகவே பிளாக் செய்யப்படும். குறிப்பாக 64, 67,68,70, 79 உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் பதியப்படும் எப்ஐஆர்ஐ பார்க்கும் வசதி எஸ்சிஆர்பி கொடுத்த வழிகாட்டுதலின்படி முடக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் அண்ணா பல்கலைக் கழக மாணவி வழக்கு குறித்து பதியப்பட்ட, எப்ஐஆர்ஐ ஐபிசியில் ( இண்டியன் பீனல் கோட் ) இருந்து பிஎன்எஸ் ( பாரதீய நியான சன்ஹிதா) குற்றவியல் சட்டத்திற்கு மாற்றும் போது ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் இந்த தகவல் கசிந்து இருக்கலாம்.

பெண்களுக்கு எதிராக வன்கொடுமைகள் வழக்கில் பதியப்பட்ட எப்ஐஆர் எப்படி வெளியானது என்பது குறித்து ஆய்வு நடத்தி வருகிறோம். மேலும் முக்கிய வழக்குகள் மற்றும் பாலியல் வழக்குகளின் எப்ஐஆர்களை பார்வையிடுவதை முடக்குவது குறித்து மீண்டும், தொழில்நுட்ப ரீதியாக சரி செய்ய எஸ்சிஆர்பி குழுவுக்கு அறிவுறுத்தி உயுள்ளோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை கல்லூரி மாணவி கொலை: குற்றவாளிக்கு மரண தண்டனை கோர்ட்டு அதிரடி

சென்னை, டிச.31


கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் 13ந்தேதி, கல்லூரிக்கு செல்வதற்காக சென்னை பரங்கிமலை ரெயில் நிலையத்தில் காத்திருந்த சத்யபிரியா என்ற மாணவியை ரெயில் முன்பு தள்ளி சதீஷ் என்ற இளைஞர் கொலை செய்தார். மகள் இறந்த துக்கத்தில் சத்யபிரியாவின் தந்தையும் மரணம் அடைந்தார். ஒருதலைக் காதல் விவகாரத்தால் இந்த கொலை சம்பவம் அரங்கேறியதாக தகவல் வெளியானது.



இந்த கொலை சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த வழக்கை சென்னை மகளிர் சிறப்பு நீதிமன்றம் விசாரித்தது. இந்த வழக்கு தொடர்பான வாதங்கள் முடிவடைந்த நிலையில், கடந்த 27 ந்தேதி சதீஷை குற்றவாளி என நீதிமன்றம் கூறியது. தொடர்ந்து, இந்த வழக்கின் தீர்ப்பு வரும் 30ந்தேதி(இன்று) வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், கல்லூரி மாணவியை ரெயிலில்தள்ளி கொலைசெய்த சதீஷுக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு அளித்துள்ளது. மாணவியை பின் தொடர்ந்து தொல்லை அளித்த பிரிவின் கீழ் 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 3 ஆண்டுகள் சிறை தண்டனையை நிறைவு செய்த பின் தூக்கு தண்டனையை நிறைவேற்ற வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# திருச்சியில் ஜன.10ம் தேதி உள்ளூர் விடுமுறை கலெக்டர் அறிவிப்பு




திருச்சி, டிச.31

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வைகுண்ட ஏகாதேசி சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சியை ஒட்டி ஜன.10ம் தேதி திருச்சியில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுவதாக அம்மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் அறிவித்துள்ளார்.

108 வைணவ திருத்தலங்களில் முதன்மையானதும் பூலோக வைகுண்டம் என அழைக்கப்படும் திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோவிலில் வைகுண்ட ஏகாதேசி பெருவிழா விமரிசையாக கொண்டாடப்படும். வைகுண்ட ஏகாதசி திருவிழாவானது இந்த ஆண்டு நாளை 31.12.2024 முதல் 9.01.2025ஆம்தேதி வரை பகல் பத்து திருவிழாவாகவும், 11.01.2025ஆம் தேதி முதல் 20.01.2025ஆம் தேதி வரை இராப்பத்து திருவிழாவாகவும் நடைபெறுகிறது. 21 நாட்கள் நடைபெறும் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பரமபதவாசல் (சொர்க்க வாசல்) வருகின்ற ஜனவரி 10ம்தேதி அதிகாலை 5.15 மணிக்கு திறக்கப்பட உள்ளது.

இந்நிலையில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருச்சி மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட கலெக்டர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அன்றைய தினம் திருச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள், கல்லூரிகளில் தேர்வுகள் நடைபெற்றால் அந்த இடங்களில் இந்த விடுமுறை பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடுமுறையை ஈடு செய்யும் பொருட்டு வரும் ஜனவரி 25ம் தேதி சனிக்கிழமை வேலை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறை நாளில் அரசு அனைத்து துணை கருவூலங்களும், மாவட்ட கருவூலமும் பாதுகாப்பாக குறைந்த பணியாளர்களைக் கொண்டு செயல்படும் என திருச்சி மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார் .

# எடப்பாடி பழனிசாமி அரசியல் ஆதாயத்திற்காக வதந்திகளை பரப்புகிறார்: அமைச்சர் கீதாஜீவன்

சென்னை, டிச.31

கல்லூரி மாணவியரிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்வதாக அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டு இருப்பதாவது;



"எங்கே எது நடக்கும் அதில் நமக்கென்ன அரசியல் ஆதாயம் கிடைக்கும் என அலைந்து கொண்டிருக்கும் பழனிசாமி, படிக்கவரும் கல்லூரி மாணவர்களிடமும் அவர்களின் பெற்றோர்களிடமும் தேவையின்றி அச்ச உணர்வை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருப்பது உண்மையிலேயே அருவருக்கத்தக்க செயல்.

உயர் நீதிமன்றத்திலேயே தமிழ்நாடு அரசு உரிய பதில் அளித்துவிட்ட போதும் தனது சுய அரசியல் ஆதாயத்திற்காக இல்லாத ஒன்றை இருப்பது போல மேலும்மேலும் வதந்திகளை பரப்பிக் கொண்டிருக்கும் பழனிசாமிக்கு கடும் கண்டனம்.

புதுமைப்பெண் திட்டம் , பெண்கள் விடியல் பயணம் , மகளிர் உரிமைத் தொகை என பெண் கல்விக்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்து பார்த்து செய்துவரும் திராவிட மாடல் ஆட்சி மீதும், முதல்அமைச்சர் மீதும் என்ன அவதூறு பரப்பினாலும் அதை தமிழ் நாட்டு பெண்கள் துளியும் நம்ப போவதில்லை.

எடப்பாடி ஆட்சியில் தனக்கு நேர்ந்த பாலியல் கொடுமைகளை வெளியே வந்து சொல்லவே பயப்பட்ட நிலை இருந்தது. புகார் பெறவே மாட்டார்கள், ஒருவேளை புகாரை பெற்றுக்கொண்டாலும் எப்.ஐ.ஆர் பதிவு செய்ய மாட்டார்கள். அந்த நிலை மாறி தற்போது திராவிடமாடல் ஆட்சியில் பெண்கள் தைரியமாக வெளியே வந்து தங்களுக்கு நேர்ந்த கொடுமையை சொல்கிறார்கள் என்றால் அது முதல்அமைச்சர்மீது தமிழ் நாட்டு பெண்கள் வைத்துள்ள நம்பிக்கைதான். அந்த நம்பிக்கையை இந்த திராவிட மாடல் அரசு என்றும் காக்கும்.

மாணவியின் புகாரை பெற்ற உடனே எவ்வளவு விரைவாக செயல் பட்டு விசாரணை நடத்தி குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளான் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். தேவையின்றி அரசியல் செய்வதையும் வதந்திகளை பரப்பி மாணவிகளின் கல்வியோடு விளையாடுவதையும் நிறுத்தி கொள்ளுங்கள்.

தனக்கு விளம்பரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், படிக்கும் மாணவர்கள் சார்ந்த இந்த சென்சிட்டிவ் விவகாரத்தில் அரசியல் செய்து, அரசியல் அறத்தையும் மாண்பையும் குழி தோண்டி புதைத்துவிட்டார் பழனிசாமி. அவரது இந்த அற்பத்தனமான செயலை தமிழ் நாட்டு மக்கள் என்றும் மன்னிக்கமாட்டார்கள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியாவில் இருந்து திருச்சிக்கு கடத்தி வரப்பட்ட அரிய வகை ஆமைகள் பறிமுதல்

திருச்சி, டிச.31

மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு பேட்டிக்ஏர்விமானத்தின் மூலம் வந்த பயணிகளை அதிகாரிகள் சோதனையிட்டனர். அதில், சாக்லேட் பெட்டிகளைப் போன்ற அட்டைப் பெட்டிகளில் கடத்தி வந்த 2,447 சிவப்பு காது ஆமைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். கோலாலம்பூரில் இருந்து ஆமைகளை கடத்திவந்த



பயணியிடம் சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். சிவப்பு காது ஆமைகளை இந்தியாவிற்குள் கொண்டு வர ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவை அதிவேகமாக வளரக்கூடியவை. இதனால், வீட்டில் வளர்க்க முடியாமல் பெரும்பாலானோர் அக்கம் பக்கத்தில் இருக்கும் நீர்நிலைகளில் கொண்டு சென்று விட்டு விடுகின்றனர். அங்கு இவை, இந்திய ஆமைகளின் வாழ்விடம், உணவு ஆகியவற்றை அபகரிக்கின்றன. அதனால் இந்த வகை ஆமை, இந்திய சுற்றுச்சூழலுக்கே ஆபத்தாக உள்ளது.

# மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுகவின் போராட்டம் தொடரும் எடப்பாடி பழனிசாமி

சென்னை, டிச.31

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் ஞானசேகரன் என்ற நபரை போலீசார்கைது செய்துள்ளனர். இந்த விவகாரம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து அதிமுக சார்பில் இன்று தமிழ்நாடு முழுவதும் அதிமுகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

அண்ணா பல்கலை வளாக பாலியல் வன்கொடுமையில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டியும், தமிழ்நாட்டில் தொடர்ந்து சிறுமிகள், கல்லூரி மாணவிகள், பெண்கள் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ள மு.க.ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்தும், அதிமுக சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் நிலையில், ஆர்ப்பாட்டத்தில் சென்று கலந்து கொண்ட கழகத்தினரை காவல்துறையினர் கைது செய்து அராஜக அடக்கு முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் குரலின் பிரதிபலிப்பான எதிர்க்கட்சியின் குரலை ஒடுக்க முயலும் மு.க.ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனம்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாரய வழக்கில் திமுகவை சேர்ந்தவர், போதைப்பொருள் மாபியா வழக்கில் திமுக அயலக அணி மாவட்ட அமைப்பாளர், என நீளும் திமுக நிர்வாகிகளின் குற்றப்பின்னணியாலும், ஞானசேகரன் குறித்து வெளிவரும் புகைப்படங்கள் மற்றும் தகவல்களாலும், திமுக அரசு இந்த வழக்கிலும் ஏதேனும் அரசியல் தலையீடு ஏற்படுத்துமோ என்ற சந்தேகம் நாளுக்கு நாள் வலுக்கிறது.

அனைத்து உண்மைக் குற்றவாளிகளும் பிடிபட்டு பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அஇஅதிமுகவின் போராட்டம் தொடரும்! இந்த வழக்கில் ஞானசேகரன் குறிப்பிட்ட அந்த நபர் யார்? #யார்_அந்த_SIR ?' என தெரிவித்துள்ளார்.

# நடிகர் விஜய்சேதுபதியின் கோரிக்கைக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில்

சென்னை, டிச.31

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணுவின் நூற்றாண்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று கொண்டாடப்பட்டது. இந்த விழாவில்முதல்அமைச்சர் மு.க ஸ்டாலின், தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்றனர். நல்லகண்ணு குறித்த 'நூறு கவிஞர்கள் நூறு கவிதைகள்' என்ற கவிதை நூலை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.



இந்தசூழலில், நல்லகண்ணுவின் நூற்றாண்டு விழாவில் நடிகர் விஜய்சேதுபதியும் கலந்து கொண்டார். அந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், "விடுதலை போராட்ட வீரர் நல்லகண்ணுவின் வாழ்க்கை வரலாறு, பாடப்புத்தகத்தில் இடம்பெற வேண்டும். காலில் செருப்பு, தீபாவளி, பொங்கல் போனஸ், 8 மணி நேர வேலை, இதெல்லாம்நல்லகண்ணு போன்றவர்கள் ரத்தம் சிந்தி பெற்றுத்தந்தது. இது பற்றி தெரியாத பலரில் நானும் ஒருவன்; இதனால் பலனடைந்த பலர்களிலும் நானும் ஒருவன்" என்று விஜய் சேதுபதி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நடிகர் விஜய்சேதுபதியின் கோரிக்கைக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பதில் அளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "விடுதலைப் போராட்ட வீரர் போற்றுதலுக்குரிய நல்லகண்ணு அய்யா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்து கொள்ளும் நோக்கில், அவரின் வாழ்க்கை குறிப்பை பாடப் புத்தகத்தில் இணைப்பது குறித்து தமிழ்நாடு முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையைப் பெற்று முடிவு செய்யப்படும்" என்று அதில் அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார்.

# பாலியல் வன்கொடுமை வழக்கு: ஞானசேகரனை 10 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க மனுதாக்கல்

சென்னை, டிச 31

சென்னை கிண்டியில் அண்ணா பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் வெளியாகி மாநிலம்முழுவதும் அதிர்வலையை ஏற்படுத்தியது. முன்னதாக மாணவி கொடுத்த புகாரின் பேரில், கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 4 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குபதிவு செய்து குற்றவாளியை 3 தனிப்படைகள் அமைத்து வலை வீசிதேடிவந்தநிலையில், அந்த கொடுஞ்செயலில் ஈடுபட்ட ஞானசேகரன் (37) என்பவரை தனிப்படை போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

இதனிடையேமாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் எப்.ஐ.ஆரில் மாணவி கூறிய புகார்கள் குறித்த தகவல்கள் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்தி இருந்தது. இதில் மாணவியின் பெயர், அவரது முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இடம்பெற்றிருந்தது. பாதிக்கப்பட்ட பெண்ணின் தகவல்கள் மறைக்கப்படாமல் சமூக வலைதளங்களில் அப்படியே வெளியிடப்பட்டதற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள்கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்தசூழலில்அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் தொழில்நுட்பக் கோளாறால் எப்.ஐ.ஆர். வெளியானதாக சென்னை காவல்ஆணையர்அருண் விளக்கம் அளித்திருந்தார். இந்த சூழலில் அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான ஞானசேகரன் மீது 8 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஏற்கெனவே 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்ட நிலையில், சட்டவிரோதமாக ஒருவரை தடுத்து வைத்தல், தொழில்நுட்ப சட்டம் உள்ளிட்ட மேலும் 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைதான ஞானசேகரனை 10 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க சைதாப்பேட்டை கோர்ட்டில் போலீசார் மனுதாக்கல் செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப் பொருள் வழக்கு: மன்சூர் அலிகானின் மகன் ஜாமீன் தள்ளுபடி

சென்னை, டிச.31

போதைப் பொருள் ஒழிப்பில் சென்னை போலீசார் தீவிரம் காட்டி வருகின்றனர். அந்த வகையில், கல்லூரி மாணவர்களுக்கு கஞ்சா சப்ளை செய்த விவகாரத்தில் கடந்த மாதம் கல்லூரி மாணவர்கள் 5 பேர் உள்பட 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட செல்போன்களில் பதிவான எண்களைக் கொண்டு தனிப்படை போலீசார் விசாரணை செய்ததில், காட்டாங்கொளத்தூர் பகுதியில் தங்கியுள்ள கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா ஆயில் டப்பாக்கள் இருப்பதாக தகவல் கிடைத்தது. இதனையடுத்து, கடந்த மாதம் 30ம் தேதி சென்னை தனிப்படை போலீசார், காட்டாங்கொளத்தூர் சென்று அறையில் பதுங்கியிருந்த கல்லூரி மாணவர்கள்2 பேரைகைது செய்து விசாரித்த னர். இவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல்போன்களில் உள்ள எண்களைக் கொண்டு தனிப்படை போலீசார் தொடர்ந்து துப்பு துலக்கினர்.

இதில் பிரபல நடிகர் மன்சூர் அலிகானின் மகன் அலிகான் துக்ளக் (26) செல்போன் எண்ணும் இருந்தது. இதனையடுத்து, நடிகர் மன்சூர் அலிகான் மகன் அலிகான் துக்ளக் உள்ளிட்ட 4 பேரைபிடித்து போலீசார் விசாரணை நடத்தினர்.

இதனைத்தொடர்ந்து அவர்கள் 4 பேரும் கைது செய்யப்பட்டனர். இந்த சூழலில் துக்ளக்கின் ஜாமீன் கோரிய மனுவை அம்பத்தூர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து, சென்னை போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி துக்ளக் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், தனக்கு ஜாமீன் வழங்கினால் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்க தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்த மனு சென்னை போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.கோவிந்தராஜன் முன்பு விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் தன்னிடம் இருந்து எந்த போதைபொருளும் பறிமுதல் செய்யபடாத நிலையில் தன்னை கைது செய்துள்ளதாகவும், இந்த வழக்கில் தனக்கு எந்தவித தொடர்பும் இல்லை என தெரிவித்தார். இதையடுத்து நீதிபதி, மனு தொடர்பாக காவல்துறை பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை இன்றைக்கு (30ம் தேதி) தள்ளி வைத்திருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பான விசாரணை இன்று நடைபெற்றது. அப்போது நடிகர் மன்சூர் அலிகானின் மகன் துக்ளக் அலிகான் ஜாமீன் மனுவை தள்ளுபடி சென்னை போதைப்பொருள் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

காவல்துறையின் வாதத்தை ஏற்று ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலூர்: கிறிஸ்துமஸ் கொண்டாட சொந்த ஊர் சென்ற அரசு பள்ளி ஆசிரியர் வீட்டில் 25 சவரன் நகை கொள்ளை



வேலூர், டிச.31

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு எல்.ஆர்.நகர் பகுதியில் வசித்து வருபவர் மோசஸ். அரசு பள்ளி ஆசிரியரான இவர், கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடுவதற்காக குடும்பத்துடன் தனது சொந்த ஊரான வாணியம்பாடிக்கு சென்றுள்ளார். இந்நிலையில், கிறிஸ்துமஸ் முடிந்து வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு இருந்தது.

மேலும் வீட்டில் இருந்த 25 சவரன் நகை, ஒரு லட்சம் ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அவர், பேரணாம்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதன் அடிப்படையில் கொள்ளை சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்காக வெளியூர் சென்ற ஆசிரியரின் வீட்டில் நகை மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குற்றாலத்தில் குவிந்த சுற்றுலா பயணிகள் அருவிகளில் ஆனந்த குளியல்



தென்காசி, டிச.31

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இரண்டு வாரங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையின் காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் மெயின் அருவி மற்றும் பழைய குற்றால அருவி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு கம்பிகள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டு சேதம் அடைந்தது. இதையடுத்து அருவி பகுதிகளில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது அனைத்து அருவிகளிலும் சீராக தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. தண்ணீர் சீராக விழுந்து வரும் நிலையில் சுற்றுலா பயணிகள் அருவிகளில் ஆனந்த குளியல் போட்டு வருகின்றனர். விடுமுறை தினம் என்பதால், சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது.

# அண்ணா பல்கலை. வளாகத்தில் பாதுகாப்பை பலப்படுத்த 16 பேர் கொண்ட குழு அமைப்பு

சென்னை, டிச.31

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து ஞானசேகரன் என்பவரை போலீசார் கைது செய்தனர். அவர் மட்டும்தான் குற்றவாளி என போலீஸ் தரப்பிலும், அரசு தரப்பிலும் கூறப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் தொடர்பான வழக்கு சென்னை ஐகோர்ட்டில் விசாரணை நடத்தப்பட்டது. அப்போது, அண்ணா பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டது. இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவிகள், பெண் பேராசிரியர்கள் நலனுக்காக 16 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. பல்வேறு பணிகளுக்கு குழு அமைத்து தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவு அளித்துள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பை அதிகரிக்க மேலும் 40 காவலாளிகளை நியமிக்கவும், ஏற்கனவே 140 காவலாளிகள் இருக்கும் நிலையில் எண்ணிக்கையை 180ஆக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டது.

விடுதிகளில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வார்டன்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவிகள் பாதுகாப்புக்காக பல்கலைக்கழகத்தில் கூடுதலாக 30 கண்காணிப்பு கேமராக்களை பொருத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ரூ.2,000 ரொக்கத்துடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்க வேண்டும் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்



சென்னை, டிச.31

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பழையனவற்றை போக்கி வீட்டைத் தூய்மைப்படுத்தும் நாளான போகித் திருநாள், இயற்கைக்கு நன்றி செலுத்தும் திருநாள், அரும்பணி புரிந்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் நாள், நண்பர்களும், உறவினர்களும் கண்டு மகிழும் நாள் என நான்கு நாட்கள் பொங்கல் விழாவினை தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரொக்கத்துடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கப்படுவது வாடிக்கையாக இருந்து வருகிறது. ஆனால், கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில், பொங்கல் பரிசு வழங்குவதில் பல குளறுபடிகள் ஏற்பட்டன. உதாரணமாக, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2022ம் ஆண்டு பொங்கல் திருவிழாவின்போது 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவித்து, இதில் பாதி பொருட்கள்கூட விநியோகம் செய்யப்படவில்லை என்றும், விநியோகம் செய்யப்பட்ட பொருட்களும் பயனற்றவையாக இருந்தன என்றும் பல வேறு புகார்கள் எழுந்தன. இந்தப் பொருட்களைச் சாப்பிட்டு பலருக்கு ஒவ்வாமை ஏற்பட்டது என்பதையும் இந்தநாடறியும்.

இதனைத் தொடர்ந்து, 2023ம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, 3,000 ரூபாய் ரொக்கம் வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்த நிலையில், 2022ம் ஆண்டு செய்த தவறுக்கு பரிகாரம் காணும் வகையில் 1,000 ரூபாய் ரொக்கம் மற்றும் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு கரும்பு ஆகியவை வழங்கப்பட்டன.

2024 ஆண்டு பொங்கல் பண்டிகையின்போதும், 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு கரும்பு வழங்கப்படுவதாக முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர், நான் உள்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியதன் அடிப்படையிலும், 2024ம் ஆண்டு மக்களவைப் பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டும், ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள், வருமான வரி செலுத்துவோர், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், சர்க்கரை அட்டைதாரர்கள், பொருளில்லா அட்டைதாரர்கள் தவிர்த்து, ஏனைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 1,000 ரூபாய் பொங்கல் பரிசாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்மூலம், பாதிக்கும் மேற்பட்டோருக்கு 1,000 ரூபாய் ரொக்கம் வழங்கப்படவில்லை.

தற்போது, 2025ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருப்பது, தமிழ்நாட்டு மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் பெஞ்சல் புயல், அதிகனமழை உள்ளிட்டவற்றால், அனைத்து மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய உடமைகள் எல்லாம் கடுமையாக சேதமடைந்துள்ளன. தமிழ்நாடு அரசு அறிவித்த நிவாரணத் தொகைக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இதன்மூலம் ஏற்பட்ட இழப்பினை சரி செய்வதற்கே அவர்களுக்கு இரண்டு, மூன்று ஆண்டுகள் தேவைப்படும். இதனால் தமிழக மக்கள் பெருத்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்கள். இந்த நிலையில், தி.மு.க. அரசின் பொங்கல் பரிசுத் தொகுப்பு அறிவிப்பின்மூலம், பொங்கல் திருநாளை விமரிசையாக கொண்டாட முடியாத நிலை தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழக மக்கள் 2025 பொங்கல் திருநாளை சிறப்புற கொண்டாடும் வகையில், எவ்வித பாகுபாடின்றி, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் குறைந்தபட்சம் 2,000 ரூபாய் ரொக்கம் உள்ளிட்ட பொங்கல் தொகுப்பினை வழங்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல்: 207 கிலோ குட்கா பறிமுதல்; ஒருவர் கைது

திண்டுக்கல், டிச.31

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் குட்கா போதைப்பொருளை பதுக்கி வைத்து விற்பனை செய்து வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலின் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது கோமணாம்பட்டியில் உள்ள மாந்தோப்பில், 27 மூட்டைகளில் குட்கா பதுக்கப்பட்டது தெரிய வந்தது. இதையடுத்து சுமார் ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 207 கிலோ குட்காவை பறிமுதல் செய்த போலீசார், அவற்றை கடைகளுக்கு சப்ளை செய்து வந்த சித்திரையன் என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சினிமாவில் பெண்கள் நலனுக்காக போராடி வருகிறேன் நடிகை பார்வதி



தமிழில் பூ, மரியான், சென்னையில் ஒரு நாள், உத்தம வில்லன், பெங்களூரு நாட்கள் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள பார்வதி மலையாளத்தில் பிரபல நடிகையாக இருக்கிறார். இந்த நிலையில் பார்வதி அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது:

"பெண்களே பெண்களுக்கு எதிராக இருக்கிறார்கள் என்ற கட்டுக்கதையை முறியடிக்க பெண்களுக்கு இடையே கூட்டணி தேவை. பெண்கள் ஒன்று சேர்ந்தால் நீதி கிடைக்கும். மலையாள நடிகர் சங்கம் அதன் நோக்கங்களை நிறைவேற்ற தவறி விட்டது. இதனாலேயே சினிமாவில் பெண்களுக்காக தனியாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

நான் நடிக்க வந்த புதிதில் நடிகைகளின் சினிமா ஆயுட்காலம் குறைவாகவே இருந்தது. கொஞ்சம் படங்களில் நடித்த பிறகு திருமணம் செய்து கொள்ளவும், சினிமாவை விட்டு விலகவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். தங்களுடன் நடிக்கும் நடிகைகள் புதியவர்களாக இருக்க வேண்டும் என்று நடிகர்கள் கருதியதால் இந்த நிலைமை ஏற்பட்டது.

இந்த பாகுபாட்டை முடிவுக்கு கொண்டுவரவும், சினிமாவில் பெண்கள் நலனுக்காகவும் தொடர்ந்து போராடி வருகிறேன். சினிமாவில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களை மையப்படுத்தி எதிர்காலத்தில் ஒரு படத்தில் நடிக்க முடிவு செய்துள்ளேன்". இவ்வாறு அவர் கூறினார்.

# பிரபல மலையாள நடிகர் ஓட்டல் அறையில் சடலமாக மீட்பு



பிரபல மலையாள நடிகர் திலீப் சங்கர் சினிமாவிலும், தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்து உள்ளார். இவர் சில தினங்களுக்கு முன்பு திருவனந்தபுரம் லாரன்ஸ் சந்திப்பு அருகே உள்ள ஓட்டலில் அறை எடுத்து தங்கினார். கடந்த இரண்டு நாட்களாக அவர் அறையில் இருந்து வெளியே வரவில்லை. இந்த நிலையில் அவரது அறைக்குள் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இதையடுத்து ஓட்டல் ஊழியர்கள் கதவை திறந்து பார்த்தபோது திலீப் சங்கர் தரையில் சடலமாக கிடந்தார்.

இதுகுறித்து உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் விரைந்து வந்து சடலத்தைக் கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். அவர் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியவில்லை. தடயவியல் நிபுணர்கள் அறையை ஆய்வு செய்து வருகின்றனர். பிரேத பரிசோதனைக்கு பிறகே அவரது இறப்புக்கான காரணம் தெரியவரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

# பேட்மேன் 2 படத்தின் ரிலீஸ் 2027ம் ஆண்டுக்கு ஒத்திவைப்பு



காமிக்ஸ் சூப்பர் ஹீரோக்களில் உலகப் புகழ் பெற்ற கதாபாத்திரம் 'பேட்மேன்'. இந்த கதாபாத்திரத்தை அடிப்படையாக கொண்டு ஏராளமான கார்ட்டூன்கள், தொலைக்காட்சிதொடர்கள், திரைப்படங்கள்மற்றும்வீடியோ கேம்கள் வெளியாகியுள்ளன. மேலும் புதிய கதைக்களங்களுடன் பல்வேறு 'பேட்மேன்' திரைப்படங்கள் வெளியாகி இருக்கின்றன.

அவற்றில் ஆஸ்கார் விருது வென்ற இயக்குநர் கிறிஸ்டோபர் நோலனின் இயக்கத்தில் வெளியான 3 பேட்மேன் திரைப்படங்கள் குறிப்பிடத்தக்கவை. அதில் பேட்மேன் கதாபாத்திரத்தில் கிறிஸ்டியன் பேல் நடித்திருந்தார். மறைந்த நடிகர் ஹீத்லெட்ஜர் 'ஜோக்கர்' என்ற வில்லன் கதாபாத்திரத்தில் மிரட்டியிருந்தார். அந்த 3 படங்களிலும் இசையமைப்பாளர் ஹான்ஸ் ஜிம்மர் அமைத்திருந்த பின்னணி இசைக்கு இன்றுவரை தனி ரசிகர் பட்டாளமே உள்ளது.

இதன் பிறகு இயக்குநர் ஜேக் ஸ்னைடர் இயக்கத்தில் உருவான 'பேட்மேன் வெர்சஸ் சூப்பர்மேன்' படத்தில் நடிகர் பென் அப்லேக், 'பேட்மேன்' கதாபாத்திரத்தை ஏற்று நடித்தார். அவரது நடிப்பு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. தொடர்ந்து ஜஸ்டிஸ் லீக், பிளாக் ஆடம் உள்ளிட்ட படங்களில் பென் அப்லேக் பேட்மேனாக நடித்திருந்தார்.

இதற்கிடையில் இயக்குநர் மேட் ரீவ்ஸ் இயக்கத்தில் உருவான மற்றொரு 'பேட்மேன்' திரைப்படம் கடந்த 2022ம் ஆண்டு வெளியானது. அதில் 'ட்வைலைட்' படங்களில் நடித்து புகழ்பெற்ற நடிகர் ராபர்ட் பேட்டின்சன் பேட்மேனாக அவதாரமெடுத்தார். இவரது நடிப்பு இதற்கு முன்பு பேட்மானாக நடித்தவர்களிடம் இருந்து சற்று மாறுபட்டு இருந்தது. இந்த படத்திற்கும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

இந்த படத்தின் 2ம் பாகம் 2026ம் ஆண்டு அக்டோபர் 2ந்தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதன்படி 'பேட்மேன் 2' திரைப்படம் 2027ம் ஆண்டு அக்டோபர் 1ந்தேதி ஐமேக்ஸ் தொழில்நுட்பத்தில் வெளியாகும் என படத்தின் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

# பாகிஸ்தானுக்கு எதிராக தென் ஆப்பிரிக்கா வெற்றி; டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் ஏற்பட்ட மாற்றம்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் தென் ஆப்பிரிக்கா அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தென் ஆப்பிரிக்கா உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்நிலையில், பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றதை அடுத்து உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில் தென் ஆப்பிரிக்கா (66.67 சதவீதம்), ஆஸ்திரேலியா (58.89 சதவீதம்), இந்தியா (55.88 சதவீதம்), நியூசிலாந்து (48.21 சதவீதம்), இலங்கை (45.45 சதவீதம்), இங்கிலாந்து (43.18 சதவீதம்) அணிகள் முதல் 6 இடங்களில் உள்ளன.

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக தோல்வி கண்டதை அடுத்து 7வது இடத்தில் இருந்த பாகிஸ்தான் (30.30 சதவீதம்) 8வது இடத்திற்கு சரிந்துள்ளது. 8வது இடத்தில் இருந்த வங்காளதேசம் (31.25 சதவீதம்) 7வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. 9வது இடத்தில் வெஸ்ட் இண்டீஸ் (24.24 சதவீதம்) உள்ளது.

# ஈரோட்டில் நடந்த மாநில மூத்தோர் தடகள போட்டி; 800க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



ஈரோடு மாவட்டத்தில் உள்ள வ.உ.சி. மைதானத்தில் 39வது மாநில அளவிலான தடகள சாம்பியன்ஷிப் போட்டி நேற்று தொடங்கியது. இதில் 30 வயதிற்கு மேற்பட்டோருக்கு பல்வேறு பிரிவுகளில், உயரம் தாண்டுதல், குண்டு ஏறிதல், வட்டு ஏறிதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

இந்த போட்டிகளில் சுமார் 800 பேர் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் அனைத்து பிரிவுகளிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் நபர்கள், ஜனவரி மாதம் மைசூரில் நடைபெறவுள்ள தேசிய அளவிலான போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# பிக் பாஷ் லீக்: ஜோஷ் பிலிப் அதிரடி... பிரிஸ்பேன் ஹீட்டை வீழ்த்திய சிட்னி சிக்சர்ஸ்

இந்தியாவில் நடத்தப்படும் ஐ.பி.எல் தொடர் போல ஆஸ்திரேலியாவில் பிக் பாஷ் லீக் கிரிக்கெட் தொடர் நடைபெறுகிறது. பிக் பாஷ் லீக் தொடரின் 14வது சீசன் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பிரிஸ்பேனில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சிட்னி சிக்சர்ஸ் பிரிஸ்பேன் ஹீட் அணிகள் ஆடின.

இதில் டாஸ் வென்ற சிட்னி சிக்சர்ஸ் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த பிரிஸ்பேன் ஹீட் 20 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 138 ரன்கள் மட்டுமே எடுத்தது. பிரிஸ்பேன் ஹீட் தரப்பில் அதிகபட்சமாக மெக்ஸ்வீனி 34 ரன்கள் எடுத்தார். சிட்னி சிக்சர்ஸ் தரப்பில் பென் துவர்ஷுயிஸ் 4 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 139 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சிட்னி சிக்சர்ஸ் அணி 16.1 ஓவர்களில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 142 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. சிட்னி சிக்சர்ஸ் தரப்பில் அதிரடியாக ஆடிய ஜோஷ் பிலிப் 66 ரன்கள் எடுத்தார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.